**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. S.T.C.No.465/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution | : pw1 cross |
| Name | :Umarani | Defence | : |
| Husband Name | :Chandirabalan | Court | : |
| Village | : Aththiyur ,Pattavilagam | Taluk | :Sirkali |
| Age | : 35 /2024 | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.05.2024

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் சீர்காழி தாலுக்கா, பட்டவிளாகம், அத்தியூரில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி ரேனுகா சீர்காழி தாலுக்கா விளந்திடசமுத்திரம், வில்வ நகரில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் சுமார் 10 வருட பழக்கம் என்றால் சரிதான். நான் ஆவின் பால் நிறுவனத்திற்கு பால் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். எதிரி அனிதா ஏஜென்சியில் மேலாளராக வேலை பார்த்து வருகிறார். எதிரி ரூ. 40000/- மாத வருமானம் பெறுவதாக என்னிடம் கூறினார். நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரிதான். ஆவின் நிறுவனத்திலிருந்து வரவு, செலவு 2024 முதல் வங்கி மூலம் செய்கிறார்கள். அதற்கு முன்பு வங்கி மூலம் பணப் பரிவர்த்தனை இல்லை. கடந்த 06.11.2019 ல் எதிரிக்கு ரூ. 5 லட்சம் நான் வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கையில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். ரூ. 5 லட்சமும் என் கணவர் வெளிநாட்டிலிருந்து சம்பாதித்து என்னிடம் கொடுத்த தொகை என்றால் சரிதான். என் கணவர் 2010 முதல் தற்போது வரை வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். ஆண்டுக்கு ஒருமுறை என் கணவர் 2, 3 மாத கால விடுமுறைக்கு ஊருக்கு வருவார். 2019 ல் ஜனவரி மாதம் ஊருக்கு வந்து பிப்ரவரி மாதம் வரை விடுமுறையில் இருந்து விட்டு சென்றார். ரேகா என்பவர் எதிரியின் தங்கை என்றால் சரிதான். 2015, 2016 ல் ரேகா மற்றும் ரேனுகாவிடம் பணம் கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல, ரேனுகாவிடம் 4, 5 முறை சுமார் 2, 3 லட்சம் பணம் கொடுத்து வாங்கியுள்ளேன்.

கடனுக்கு பினையமாக கடனுறுதிச் சீட்டும், காசோலையும் எழுதி வாங்கிக் கொள்வேன் என்றால் சரிதான். 06.11.2019 ம் தேதி கொடுத்த தொகை ரூ. 5 லட்சம் என்பதால் அதற்கு பினையமாக நான் அடமானக் கடன் பத்திரம் எழுதி பதிந்து வாங்கிக் கொண்டேன் என்றால் சரிதான். அடமானக் கடன் பத்திர பதிவு செய்த தேதி அன்றே நான் காசோலை எதிரியிடம் இருந்து பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. அடமானக் கடன் பத்திரத்தில் **பு.சா.ஆ. 7** ஆவணத்தில் 100 க்கு மாதம் 2 ரூபாய் வீதம் மாதா மாதம் செலுத்த வேண்டும் என்று எழுதி வாங்கிக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். மாதா மாதம் வட்டி செலுத்த தவறினால் கூடுதல் வட்டி செலுத்த வேண்டும் என்றும், ஓராண்டுக்குள் அசல் தொகையை செலுத்த வேண்டும் என்றும் எழுதிக் கொண்டுள்ளோம் என்றால் சரிதான். அடமானக் கடன் பத்திரத்தில் **பு.சா.ஆ. 7** ஆவணத்தில் 100 க்கு மாதம் 2 ரூபாய் வீதம் மாதா மாதம் செலுத்த வேண்டும் என்று எழுதி கொண்டுத்துள்ளது போல் எதிரி வட்டியை எனக்கு செலுத்தினாரா என்றால் இல்லை. மாதா மாதம் வட்டி செலுத்தவில்லை என்பதற்காகவும் ஓராண்டுக்குள் அசல் தொகையை செலுத்தவில்லை என்பதற்காகவும் எதிரி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். காசோலையில் கணட தொகையை எதிரி எனக்கு செலுத்தவில்லை என்பதற்காக நான் சீர்காழிகாவல் நிலையத்தில் 21.8.2020 ம் தேதி எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மனு ரசீதை எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி எனக்கு எதிராக சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னை யாரும் விசாரிக்கவில்லை. எதிரிக்கு நான் 6.11.2019 ம் தேதி அன்றே ரூ. 5 லட்சம் ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 5.11.2019 ம் தேதி ரூ. 4 லட்சமும் அடமானக் கடன் பத்திரம் பதிந்த அன்றைய தினம் 1 லட்சமும் எதிரிக்கு ஆக மொத்தம் 5 லட்சம் கடனாக கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பல்வேறு தேதிகளில் ரூ. 3,01,650 /- (மூன்று லட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது) மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பாக்கித் தொகையான ரூ. 1, 98, 350/- த்தை நான் ஒருபோதும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாக்கித் தொகையை கேட்டு நான் கொடுக்க மறுத்ததால் 3.3.2020 அன்று சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதற்கு காவல் துறையில் மனு ரசீது கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வேறு நபர்களுக்கு நான் பணம் கொடுத்து வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான்

எதிரிக்கு கொடுத்த கடன் தொகைகளை வருமான வரிக்கணக்கில் காட்டி உள்ளேனா என்றால் இல்லை. எதிரி ரேனுகா கொடுத்த புகாரின்பேரில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. ரூ. 3,01,650 /- பணத்தை எதிரி எனக்கு ஒரு மாத காலத்தில் திரும்ப கொடுப்பதாக ஒப்புக் கொண்டு எதிரி கொடுத்த புகார் விசாரித்து முடிக்கப்பட்டதென்றாலும் நானும் ரேனுகாவும் காவல் நிலையததில் ஒப்புக்கொண்டு தனித்தனியாக முச்சலிகா எழுதிக் கொடுத்தோம் என்றாலும் சரியல்ல. 21.8.2020 ம் தேதி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்து விசாரித்து அன்றைய தினமே எதிரி எனக்கு இந்த வழக்கு காசோலை கொடுத்தார். மேற்படி விவரத்தை நான் என் மனுவிலும் அறிவிப்பிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பு.சா.ஆ.5 ஆவணத்தில் சொல்லாமலேயே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ. 1 காசோலை ஆவணத்தில் கையெழுத்து ஒரு மையிலும், எழுதியுள்ள விவரம் ஒரு மையிலும், வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி தான் இந்த வழக்கு காசோலையை எனக்கு கொடுத்தார். எதிரி 21.10.2020 ம் தேதி போட்டு 21.8.2020 ம் தேதி எனக்கு கொடுத்தார். 24.11.2020 ம் தேதி பு.சா.ஆ. 1 காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பு.சா.ஆ. 1 காசோலையை ஒரு மாத கால தாமதமாக வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான காரணத்தை அறிவிப்பிலும் பிராதிலும் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. அடமானப்பத்திரம் பதிந்து கொடுத்த அன்றைய தினமே அசல் செட்டில்மென்ட் ஆவணத்தை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். காசோலை கொடுத்த அன்றைய தினம் அசல் செட்டில்மென்ட் ஆவணத்தை பெற்றுக் கொண்டார். அசல் செட்டில்மென்ட் ஆவணத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும் என் வசம் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. ஒரே தேதியில் ரூ. 5 லட்சம் நான்எதிரிக்கு கொடுக்க எனக்கு பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. 5.11.2019 ல் ரூ. 4 லட்சமும் 6.11.2019 ல் 1 லட்சமும் எதிரிக்கு கடனாக கொடுத்தேன் என்ற விவரத்தை மனுவிலும் அறிவிப்பிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அடமானக் கடன் பத்திரத்தில் கண்ட தொகையை திரும்ப செலுத்த வேண்டி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்து அசல் வழக்கும் இடைநிலை மனுவும் விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பிராது நகல் தான் நான் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 392/2021 தாக்கல் செய்து சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மேற்படி

வழக்கு மாறுதலாகி OS 6/2023 என்றால் சரிதான். **எதிரிக்கு சார்வு செய்யப்பட்ட அசல் பிராது நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிக்கு சார்வு செய்யப்பட்ட இடைநிலை மனு நகல் IA 2/2021 எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் எதிரி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே வரவு செலவு குறித்து நான் 2 நீதிமன்றங்களில் பரிகாரம் பெற்று கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்தபோது எதிரி பிணையமாக கொடுத்த பூர்த்தி செய்யாத காசோலையை நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 21.8.2020 ம் தேதியில் எதிரி எனக்கு காசோலை கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அடமானக் கடன் பத்திரத்தின்படி ரூ. 1, 98, 350/- தை மறைத்து நான் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக நான் மனுவில் சொல்லி உள்ளேனா என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எதிரி கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடன் தொகைக்காக கொடுக்கப்பட்டது அல்ல என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**